பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 61331 ★ சிறப்பு: 1953 ★ விலை [illegible] காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: ஐப்பசி 26 (12—11—71) வெள்ளி — வெளியூர்: ஐப்பசி 27 (13—11—71) சனி [இதழ்: 125

கண்டக்டரின் நாட்டுப் பற்று!

சென்னை, நவ. 12—

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையைச் சமாளிக்கத் தன்னுடைய பங்காகத் தன்னுடைய நாள் படியிலிருந்து நாள் தோறும் ஒரு ரூபாய்வீதம் நன்கொடை அளிக்கத் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்தைச் சேர்ந்த நடத்துநர் (கண்டக்டர்) ஒருவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

எஸ். மாரிமுத்து என்ற அந்தக் கண்டக்டரின் செயலைப் போக்குவரத்து இயக்குநர் பாராட்டியுள்ளார்.

அமைச்சர் என். வி. என். அறுபதாம் பிறந்த நாள்

முதல்வர் சார்பில் வாழ்த்து— மற்றும் ஏராளமானோர் மாலையணிவித்தனர்

சென்னை, நவ. 22 —

திராவிட முன்னேற்றக் கழகத் துணைப் பொதுச்செயலாளரும்—தமிழகத் தொழிலாளர் நலத்துறை அமைச்சருமான திரு. என். வி. நடராசன் அவர்கள், இன்று தமது அறுபதாம் ஆண்டு பிறந்த நாளை சென்னையில்—தம் இல்லத்தில் கொண்டாடினர்.

இன்று காலை திரு. என். வி. என். அவர்கள், கடற்கரையில் உள்ள அண்ணா கல்லறைக்கு மலர் வளையம் வைத்தும், அண்ணா சாலையில் உள்ள அண்ணா திருவுருவச் சிலைக்கு மாலையணிவித்தும் அஞ்சலி செலுத்தினர்.

முதலமைச்சர் டாக்டர் கலைஞர் சார்பில் அவருடைய மகன் மு.க. ஸ்டாலின், என்.வி.என். அவர்கள் இல்லம் வந்து மாலையணிவித்து வாழ்த்துக்கூறினர்.

திண்டுக்கல்லைச் சேர்ந்த மா. தங்கவேலர், நாராயணன், முருகேசன், மூர்த்தி முதலிய தோழர்கள் 60 மெழுகுவர்த்திகள் பதித்த 'கேக்' ஒன்றை அளித்தனர்.

அமைச்சர்கள் நாவலர் இரா. நெடுஞ்செழியன், ப. உ. சண்முகம், சத்தியவாணிமுத்து, அன்பில் தர்மலிங்கம், க. இராசாராம், எஸ். இராமச்சந்திரன், சட்டப் பேரவைத் தலைவர் கே. ஏ. மதியழகன், நீதிபதி கோகுலகிருட்டினன், இந்திரா காங்கிரசுத் தலைவர் ஏ. பி. சி. வீரபாகு, திரைப்பட இயக்குநர் கிருட்டினன் — பஞ்சு, திரு. கா. அப்பாதுரையார், திருமதி அலமேலு அப்பாதுரை, எஸ். டி. சோமசுந்தரம் எம்.பி. மற்றும் ஏராளமான கழகத் தோழர்களும் — நகரப் பிரமுகர்களும் — அதிகாரிகளும் வந்து அமைச்சருக்கு மாலையணிவித்து வாழ்த்துக் கூறிச் சென்றனர்.

மழை விடாது பெய்துகொண்டிருந்தும், ஏராளமான தோழர்கள் வந்து மாலை அணிவித்தவண்ணம் இருந்தனர்.

கோவையில்:

நேற்று கோயமுத்தூரில் அமைச்சர் என். வி. என். அவர்கட்குப் பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டது.

சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் நீலநாராயணன், துணைச் செயலாளர் சீதாபதி, பொருளாளர் டி. கே. கபாலி, 'அறிவகம்' சண்முகம் ஆகியோர் பிறந்த நாள் கேக் வழங்கினர்.

மதுரை மேயர் எஸ். முத்து அவர்கள் மாலையணிவித்தார்.

கோவை மாவட்ட விவசாயிகள் முன்னேற்றச் சங்கச் செயலாளர் அத்தாணி பாபு மாலையணிவித்தார்.

வங்க தேசத்தில் பாகிஸ்தான் திணறல்

விடுதலைப் படைமுன் தாக்குப் பிடிக்க முடியவில்லை

டாக்கா, நவ. 12—

வங்க தேச விடுதலைப் படையினரின் வீரமிக்கத் தாக்குதலால் பாகிஸ்தான் படையினரின் உறுதி குலைந்து கலகலத்து நிற்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

வங்க தேசக் கொரில்லாப் படையினர் டாக்காவின் வடபகுதிகளிலும் குண்டுகள் எறிந்து தாக்குதல் நடத்தியிருக்கின்றனர்.

பாகிஸ்தான் இராணுவ ஆதிக்கத்திற்குள் இருக்கும் கல்வி நிறுவனங்களை மூடிவிடும்படிச் செய்யும் குறிக்கோளுடன், கல்வி நிறுவனங்கள் மீதே பெரும்பாலும் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர்.

கிழக்கு — மேற்கு எல்லையில் பதட்டநிலை

புதுடில்லி, நவ. 12—

கிழக்கு — மேற்குப் பகுதிகளில் இன்னமும் பாகிஸ்தானின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் இருந்துவருவதாகவும், நிலைமை பதட்டமாகவே இருப்பதாகவும் அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கிழக்குப் பகுதியில் இந்தியத் துருப்புகள் பாகிஸ்தான் பகுதிக்குள் நுழைந்துவிட்டதாகப் பாகிஸ்தான் கூறுவது பொய்ப் பிரச்சாரமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

வாஷிங்டனில் தமிழக முதல்வர் கலைஞர்

புகழ் வாய்ந்த அரசியல் தலைவர்களைச் சந்திக்க முடிவு

வாஷிங்டன், நவ. 12—

அமெரிக்க அரசின் அழைப்புக்கிணங்க மூன்று வாரச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், நேற்று இங்கு வந்துசேர்ந்தார்.

அவருக்கு விமான நிலையத்தில் இந்தியத் தூதுவர் எல்.கே. ஜா, அமெரிக்க அரசு அதிகாரிகள் மற்றும் வாஷிங்டன்வாழ் தமிழ்ப் பெருமக்கள் கூடிநின்று சிறப்புமிக்க வரவேற்பு அளித்தனர்.

அமெரிக்க அரசின் விருந்தினராகத் தங்கியிருக்கும் டாக்டர் கலைஞர், அமெரிக்காவின் பல பகுதிகளுக்கும் சென்று, மாநில — மத்திய அரசுகள் இயங்கும் விதம் பற்றியும், மற்றும் நகர வளர்ச்சி, தொழில்—வேளாண்மைப் பிரச்சினைகள் குறித்தும் விவாதம் நடத்தி அறிந்துகொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

அமெரிக்க அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதுடன், ஆசிய விவகாரத் துணைக் குழுத் தலைவரான அமெரிக்கக் காங்கிரசு உறுப்பினர் கல்வாகர், செனட்டர் சாக்ஸ்பை போன்ற புகழ்பெற்ற அரசியல் தலைவர்களையும் சந்திக்கத் திட்டமிட்டிருக்கிறார்.

இப்போது வகுக்கப்பட்ட திட்டப்படி முதல்வர் கலைஞர் அவர்கள், சிகாகோ, கான்சாஸ் பல்கலைக்கழகம், டென்னசி பள்ளத்தாக்கும் பகுதிகள், கலிபோர்னியாவின் வேளாண்மைத் தொழில் ஆகியவற்றைப் பார்வையிட முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஆயினும், இன்று கலைஞர் அவர்கள் பால்டிமோருக்குச் சென்று கண் பரிசோதனை செய்துகொண்டு தாம் பெறவேண்டிய மருத்துவ வசதிகள் குறித்து அறிந்தபின்னரே சுற்றுப்பயணத் திட்டம் இறுதியாக்கப்படும்.

இந்திரா காந்தி நாடு திரும்பியதும் அவசர நிலை பிரகடனம்?

இரு அயல் நாட்டுத் தூதுவரகங்கள் அச்சம்

தங்கள் நாட்டு மக்களை வெளியேற்ற முன்னேற்பாடு

புதுடில்லி, நவ. 11

தலைமையமைச்சர் இந்திரா காந்தி நாடு திரும்பியதும், அவசர நிலை பிரகடனமாகலாம் என்று அஞ்சி முன்கூட்டியே டில்லியில் உள்ள இரண்டு அயல்நாட்டுத் தூதுவரகங்கள், தங்கள் நாட்டுக் குடிமக்களை இந்தியாவை விட்டு வெளியேற ஆயத்தமாக இருக்குமாறு கேட்டுக்கொண்டிருக்கின்றனவாம்.

நெருக்கடி நிலை ஏற்பட்டுவிட்டால் தங்கள் நாட்டுக் குடிமக்கள் பத்திரமாக இருக்க முடியுமா என அந்த அயல்நாட்டுத் தூதரகங்கள் கவலை கொண்டுள்ளனவாம்.

இந்தியாவில் உள்ள தத்தம் நாட்டுக் குடிமக்களுக்கு, இந்தத் தூதுவரகங்கள் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில், இந்தியாவைவிட்டு வெளியேறுவதற்கு ஏதேனும் உதவி தேவையானால், தூதரகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொண்டிருக்கின்றனவாம்.

1965-ல் பாகிஸ்தான்—இந்தியா போர் மூண்டபோது சில குறிப்பிட்ட மேலைநாட்டுத் தூதரகங்களைச் சேர்ந்த தூதுவரக ஊழியர்களின் குடும்பங்கள் பாங்காக்கும் வேறு சில நகரங்களுக்கும் சென்று தங்கின.

எந்த நாட்டின் நிர்ப்பந்தத்துக்கும் இந்தியா பணியாது

இரஷ்யாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் கூட்டுச் சேராக் கொள்கைக்கு முரணன்று

தென் கிழக்கு ஆசியாவில் அமைதி நிலவ இந்தியா நடவடிக்கை எடுத்தாக வேண்டும் — மேற்கு ஜெர்மனியில் இந்தியத் தலைமையமைச்சர் உரை

பான், நவ. 12—

"இந்தியாவில் நிலையான தன்மை இல்லாவிட்டால், பாகிஸ்தானிலோ, தென் கிழக்கு ஆசியாவிலோ சமாதானம் நிலவ முடியாது; எவ்வளவு நாடுகள் எவ்வளவு படைகளை அனுப்பினாலும் சமாதானம் ஏற்படாது என்பதை உலக நாடுகள் உணர வேண்டும்.

"இந்தியாவின் பாதுகாப்புக்கும் — உரிமைக்கும் ஏற்படக்கூடிய அபாயங்களைச் சமாளிக்கத் தேவையான நடவடிக்கைகளை இந்தியா எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும்.

"எங்கள் மீது, சுமத்தப்பட்டுள்ள சுமைகளைத் தாங்கிக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம்; இன்று தோன்றியுள்ள சங்கடங்களை மக்கள் ஒற்றுமையுடனிருந்து சமாளிப்பார்கள்.

"சோவியத் இரஷ்யாவுடன் நேச உறவு ஒப்பந்தத்தைச் செய்துகொண்டதன் மூலம் இந்தியா தனது கூட்டுச் சேராக் கொள்கையைக் கைவிட்டுவிடவில்லை; எந்த நாட்டின் நிர்ப்பந்தத்திற்கும் இந்தியா பணியாது; எப்போதுமே இதை நாங்கள் எதிர்த்து வந்திருக்கிறோம். சுதந்தரத்திற்காகப் போராடியவர்கள் நாங்கள்; ஆகவே யாருடைய செல்வாக்கின் கீழும் நாங்கள் வரமாட்டோம்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, மேற்கு ஜெர்மனியிலுள்ள பீதோவன் மண்டபத்தில் ஆற்றிய உரையில் தெளிவுற விளக்கிக் கூறினர்.

தொலைபேசி மூலம் தொடர்பு

தமிழக நிலவரம் குறித்து ப. உ. சண்முகத்துடன் பேசினர்

தற்போது அமெரிக்காவிலுள்ள இந்தியத் தூதரின் விருந்தினராக கலைஞர் தங்கியுள்ளார். முரசொலி மாறனும் அவருடன் இருக்கிறார்.

நேற்று மாலை வாஷிங்டன் நகரி விருந்து சென்னைக்குத் தொலைபேசி மூலம் உணவு அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்களுடன் தொடர்பு கொண்டார்; தமிழ்நாட்டின் நிலவரம் பற்றியும், பொள்ளாச்சித் தேர்தல் பற்றியும் விசாரித்தார்.

"பொள்ளாச்சியில் தி. மு. கழகம் வெற்றி பெறுவது உறுதி" என்று ப. உ. சண்முகம் கூறினர்.

சில நாட்களுக்குமுன் காலில் அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட கழகப் பொருளாளர் — எம். ஜி. ஆர். முழு குணம் அடைந்து விட்டாரா என்று கலைஞர் கேட்டார்; குணம் அடைந்து வருவதாக அமைச்சர் ப. உ. சண்முகம் தெரிவித்தார்.

மாஸ்கோ, நவ. 12—

ஆர்க்டிக் பெருங்கடல் பனிப் பகுதியில் தங்கம் இருப்பதை இரஷ்ய விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருப்பதாக இரஷ்யச் செய்தி நிறுவனமான '[illegible]' அறிவித்தது.

இப்பகுதியில் தங்கமும்—[illegible] ஏராளமாகக் கிடைக்கக்கூடிய பகுதிகளை இந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்துவிட்டனராம்.

அவசர நிலையைச் சமாளிக்க அதிக உற்பத்தி

கூடுதல் 'ஷிப்டு'கள் வேலை செய்ய அரசு அனுமதி

அரசுக்குத் தொழிலாளர்--தொழிலதிபர்கள் அளித்துள்ள உறுதிமொழி

புதுடில்லி, நவ. 11—

தொழில் நிறுவனங்களை, கூடுதல் 'ஷிப்டு'கள் வேலை செய்ய அனுமதிப்பதன்மூலம், அவற்றின் தற்போதைய உற்பத்திச் சக்திகளுடன் அதிக அளவில் தயாரிப்பதற்கு அரசு அனுமதி தரக் கூடும்.

அவசர நிலையில் ஏற்படக்கூடிய தேவைகளை முழுவதுமாகச் சமாளிப்பதற்கு இயலும்வகையில், தொழில் துறையில் உற்பத்தியை விரைவாக அதிகப்படுத்தும் நோக்கத்துடன் இந்த நடவடிக்கையை எடுக்கலாமா என்று அரசு பரிசீலனை தெரியவருகிறது.

தொழில்துறை மத்திய ஆலோசனைக் குழுக் கூட்டத்தில், தொழில் வளர்ச்சி அமைச்சர் மொய்னுல் ஹக் சௌத்ரி இந்தத் தகவலைத் தெரிவித்தார்; 'அதிகாரிகள் மட்டத்தில் இந்த யோசனைக்கு இசைவு கிடைத்திருக்கிறது; விரைவில் இதுபற்றி உயர் மட்டத்தில் பரிசீலனை நடைபெறும்' என்றும் அவர் சொன்னார்.

ஆலோசனைக் குழுக்கூட்டத்தின் விவாதங்களை முடித்து வைத்துப் பேசுகையில் அவர், 'இந்தத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டால், அவசர நிலையின் தேவைகளைச் சமாளிப்பதோடு பொருள்கள் பற்றுக்குறை பிரச்சினையைச் சமாளிக்கவும் இயலும்' என்றார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"பின்தங்கிய பகுதிகளில் தொழில்களைத் தொடங்கப் பெருந் தொழில் நிறுவனங்கள் லைசென்சு கேட்டால்--அவற்றுக்கு வேறு தொழில் முயற்சியாளர் எவரும் முன்வரவில்லை என்றால், அரசாங்கம் பெருந் தொழில நிறுவனங்களின் கோரிக்கைகளைச் சாதகமாகப் பரிசீலனை செய்யும்."

தொழிலதிபர்கள் — தொழிலாளர்கள் உறுதி

தேசிய அவசர நிலை ஏற்படுமானால், தொழில் துறையில் உற்பத்தி--சப்ளைகள்---விலைவாசிகள் ஆகியவற்றை நிலைநிறுத்துவதில் அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதாகத் தொழிலாளர் பிரதிநிதிகளும்—தொழில் நிர்வாகிகளும் உறுதியளித்தனர்.

தொழில் வள அமைச்சர் மொய்னுல் ஹக் சௌத்ரி, உற்பத்தியைப் பெருக்குவதிலும், தொழில் துறையில் வேலைநிறுத்தம்--கதவடைப்பு போன்ற தகராறுகள் இல்லாத நிலையை உருவாக்குவதிலும் கவனம் செலுத்த வேண்டுமென்று தொழிலதிபர்களையும்--தொழிலாளர்களையும் கேட்டுக்கொண்டதையடுத்து இந்த உறுதிமொழி கிடைத்தது.

பரிசுச் சீட்டு விற்பனை

ஒரு விளக்கம்

சென்னை, நவ. 11—

தமிழ்நாட்டில் பரிசுச் சீட்டுகளை விற்பதற்கு அனுமதி பெற்றுள்ள ஏஜெண்டுகள், தமிழக அரசின் பரிசுச் சீட்டுகளை மட்டுந்தான் விற்கலாம் என்றும், அவர்கள் மற்ற மாநிலப் பரிசுச் சீட்டுகளை விற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படவில்லையென்றும் அதிகார பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

போலீசுக் கமிஷனர் விளக்கம்

"இதர மாநிலப் பரிசுச் சீட்டுகளின் விற்பனை மட்டுமே தடை செய்யப்பட்டிருக்கிறது; அவற்றை வைத்திருப்பதைத் தடை செய்யப்படவில்லை"

என்று போலீசுக் கமிஷனர் கே. ஆர். ஷெனுய், செய்தியாளர்களிடம் விளக்கிக் கூறினர்.

சிறு தொழில் துறையில் மருந்துகள் உற்பத்தி

தொழில் வல்லுநர்களுக்குத் தமிழக அரசு முழு உதவி

சாராயப் பற்றுக்குறையைத் தவிர்க்க நடவடிக்கை -- அமைச்சர் செ. மாதவன் விளக்கம்

சென்னை, நவ. 12—

"மருந்துகள் பற்றுக்குறையைத் தீர்ப்பதற்கு உதவும் வகையில், தமிழ்நாட்டில் சிறு தொழில் துறையில் மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை நிறுவும் தொழில் முறை வல்லுநர்களுக்கு மாநில அரசு 100 சதவிகிதம் உதவி அளிக்கும்.

"மருந்துகள் தயாரிக்கும் தொழில்களுக்கும், இரசாயனத் தொழில்களுக்கும் ஒரு மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படும் தொழில் துறைக்கான சாராயத்தைத் தலா 20 இலட்சம் காலன் தயாரிக்கும் இரு தொழிற்சாலைகளை நிறுவ மாநில அரசு உதவும்; இந்த மூலப் பொருள் தற்போது பற்றுக்குறையாக உள்ளது. இந்தப் பற்றுக்குறையை உடனடியாகத் தீர்ப்பதற்கு உத்தரப் பிரதேசத்திலிருந்து 11.50 இலட்சம் காலன் தொழில் துறைக்கான சாராயத்தைத் தமிழ்நாடு இறக்குமதி செய்யும்; உ.பி.-யிலிருந்தும், மைசூரிலிருந்தும் இந்த மூலப் பொருளை மேலும் பெற முயற்சி செய்யப்படுகிறது" என்று தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள் தெரிவித்தார்.

அகில இந்திய தொழில் துறை உற்பத்தியாளர் நிறுவனம் (ஏ. ஐ. எம். ஓ.) ஏற்பாடு செய்துள்ள இரசாயனம்--பிளாஸ்டிக்--பிங்கான் கண்காட்சி ஒன்றை, ஆளுநர் கே. கே. ஷா இன்று துவக்கிவைத்தார்; அந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே அமைச்சர் செ. மாதவன் மேற்கண்டவாறு கூறினர்.

"தொழில் துறைக்கான சாராயம் பற்றுக்குறையாக இருப்பதால், மருந்துகள் தயாரிக்கும் தொழில்களும், இரசாயனத் தொழில்களும் பாதிக்கப்படுகின்றன என்பதை ஒப்புக்கொள்கிறேன்; இந்த நிலையை அகற்ற அரசாங்கம் ஏற்கனவே எடுத்துள்ள நடவடிக்கைகள் வழி வகுக்கும்" என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

"தொழில் துறைக்கான சாராயத்தைத் தயாரிக்கும் புதிய தொழிற்சாலைகளில் ஒன்று கோவை மாவட்டத்தில் அமைக்கப்படும்; மற்றொன்று கூட்டுறவுத் துறையில அமைக்கப்படும்" என்றும் அவர் தெரிவித்தார்.

பெரிய – நடுத்தர ரக -- சிறிய ரக இரசாயனத் தொழிற்சாலைகளுக்குத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கார்ப்பரேஷன், சிறு தொழில்கள் வளர்ச்சிக் கார்ப்பரேஷன் ஆகியவை மூலம் உதவியளிக்கப்படுகிறது; பிளாஸ்டிக் நிறுவனங்களுக்கும் இவை உதவும்.

"பின்தங்கிய பகுதிகளில் ரூ. 50 இலட்சம் வரையில் செலவில் தொடங்கப்படும்; புதிய தொழில்களுக்கு 10 சதவிகிதம் உதவித் தொகை அளிப்பது என்ற மத்திய அரசாங்கத்தின் திட்டத்தைத் தமிழ்நாடு தொழில்வளர்ச்சிக் கார்ப்பரேஷன் ஒருங்கிணைக்கும்.

அதுமட்டுமன்றி, மாநில அரசிடமிருந்து ரூ. 5 இலட்சமும் அதற்கு அதிகமாகவும் அத்தகைய தொழில்களுக்குத் தரப்படும்; நாட்டுடைமையாக்கப்பட்ட பாங்கிகளின் உதவியுடன் தொழில் கடன் உத்தரவாதத் திட்டமும் செயல்படுத்தப்படும்" என்றும் அவர் கூறினர்.

"புதிய தொழில் முயற்சியாளர்களுக்கு அவசியமான நிலத்தை அளிப்பதற்கு வகை செய்வதற்குத் தேவையானல் புதியதோர் சட்டம் இயற்றப்படும்" என்றும் அவர் சொன்னர்.

"ஐ. சி. ஐ.-யின் கூட்டுறவுடன் தொடங்கத் தமிழ்நாடு அரசாங்கம் திட்டமிட்டுள்ள மருந்துகள் தயாரிக்கும் பெரிய தொழிற்சாலைக்கான லைசென்சு இன்னமும் கிடைக்கவில்லை" என்று அமைச்சர் வருத்தம் தெரிவித்தார்.

"பிளாஸ்டிக் தயாரிப்புக்குத் தேவைப்படக்கூடிய பல இயந்திரங்களைத் தற்காலிக அடிப்படையில் இறக்குமதி செய்யலாம்" என்று ஆளுநர் கே. கே. ஷா கூறினர்.

நங்கநல்லூரில் பேரங்காடி

ஆலந்தூர் நகராட்சித் திட்டம்

சென்னை, நவ. 12—

நங்கநல்லூரில் பேரங்காடி (சூப்பர் மார்க்கெட்) ஒன்றை அமைப்பது — நகராட்சிமன்ற நிர்வாகக் கட்டடம் ஒன்றைக் கட்டுவது உட்பட ரூ. 15 இலட்சம் செலவாகக் கூடிய திட்டங்களை அரசாங்கத்திடம் ஆலந்தூர் நகராட்சி அளித்துள்ளது.

"அரசாங்கத்தின் அனுமதி கிடைத்ததும், கட்டடம் சம்பந்தமான வேலை மேற்கொள்ளப்படும்" என்று நகராட்சி ஆணையர் வி.ஆர். வரதராசன் கூறினர்.

ரூ. 3.70 இலட்சம் செலவில் நகராட்சியின் 93 சாலைகளை மேம்பாடு செய்யும் வேலை இப்போது நடந்து கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ரூ. 4 இலட்சம் செலவில் சாலைகளை மேம்பாடு செய்வதற்காக மற்றொரு சிறப்பு திட்டம் தயாரிக்கப் பட்டிருப்பதாகவும், அதுவும் விரைவில் மேற்கொள்ளப்படும் என்றும் கூறினர்.

புதிய வகை மயக்க மருந்து

அறுவைச் சிகிச்சை செய்து கொள்வோர் அந்த நேரத்தில் தன்னை மறந்திருக்கும்படிச் செய்ய மயக்க உணர்வு ஏற்படுத்துகிறார்கள் அல்லவா? இதற்கான புது வகை மருந்து ஒன்று இலண்டனில் தயாரிக்கப்பட்டு -- சோதித்துப் பார்க்கப்பட்டு வருகிறது; ஊசி மூலம் இந்த மருந்தைச் செலுத்தலாம்.

'ஸ்டெராயிட்ஸ்' என்ற மூலப் பொருளிலிருந்து இப்புதிய மருந்து தயாரிக்கப்படுகிறது; இதே மூலப் பொருளில் இருந்துதான் கருத்தடை மாத்திரைகளும் தயாராகின்றன.

தற்போது அளிக்கப்பட்டுவரும் மயக்க மருந்துகளில் உள்ள சில குறைகள் புதிய மருந்தில் இராது.

முதலாளி வழங்கும் 'இனும்' அல்ல-- தொழிலாளர் பெறவேண்டிய பங்குப் பணமாகும் போனசு

போனசு சட்டத்தில் உள்ள ஓட்டைகளை அடைக்க வழி செய்க!

சட்டத் திருத்தத்தை வலியுறுத்தி காட்டூர் கோபால் விளக்கம்

சென்னை, நவ. 12 -

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைப் பொதுச்செயலாளர் காட்டூர் கோபால் அவர்கள், போனசு சட்டத் திருத்தம் குறித்து வெளியிட்டுள்ள விளக்க அறிக்கை வருமாறு:-

"போனசு என்பது, மூலதனம் போட்டுத் தொழில் நடத்துகின்ற அதிபர்கள், ஆண்டுக்கு ஒருமுறை--பெரும்பாலும் தீபாவளி போன்ற பண்டிகைக் காலத்திற்கு முன்னதாக அளிக்கப்படுகின்ற 'இனும்' தொகை அல்லது 'தர்மப் பணம்' என்கின்ற வகையில், முன்பெல்லாம் பலரால் கருதப்பட்டு வந்தது; ஆனால் உண்மையில் போனசு என்பது, தொழிலதிபர்கள், உழைப்பாளர்களுக்கு அளித்தாக வேண்டிய பங்குப் பணமாகும் -- 'பாக'ப் பணமாகும்.

கணவனுக்கும்--மனைவிக்கும் குழந்தை பிறக்கிறது; அது, இருவருக்குமே சொந்தமானமாகும்; அதுபோல், தொழிற்சாலைகளில் பிறக்கும் இலாபக் குழந்தை, மூலதனம் போடுகின்ற அதிபர்களுக்கும்--உழைப்புத்தனம் அளிக்கின்ற உழைப்பாளிகளுக்கும்--ஆக இருவருக்குமே சொந்தம்--சம உரிமையாகும்; எனவேதான், போனசு என்பது தொழிலாளர்களின் சட்டபூர்வ 'பாக'ம் பணம் என்கிறோம்.

தொழிற்சாலைகளில் கிடைக்கின்ற இலாபத்தின் உரிய பங்கினை உழைப்பாளிகளுக்கு அளித்திட வேண்டியது மிக அவசியமானதாகும்; சட்டப்படியும்--சம்பிரதாயப்படியும் நியாயபூர்வமானதாகும்.

இந்தப் போனசுப் பிரச்சினையின் மீது பல்வேறு இடங்களிலும் தொழிற் தகராறு எழுவதைப் பார்க்கிறோம்; முன்பெல்லாம் தொழிற்சாலைகளில், ஆங்காங்கு இயங்கிவருகின்ற தொழிற் சங்கங்களின் சக்திக்கேற்பவும்--- பேச்சுவார்த்தை வெற்றியையொட்டியும் -- முறைப்படி எடுக்கின்ற நடவடிக்கைகளையொட்டியும் போனசு பிரச்சினையில் தீர்வு ஏற்பட்டு வந்தது.

உயர்மட்ட தொழில் வாரியத்தில் அளிக்கப்பட்ட தீர்ப்புகளை முன்மாதிரியாகக்கொண்டு, அப்போதெல்லாம் போனசுப் பிரச்சினையில் ஏற்பட்ட வழக்குகளிலும்-- பேச்சுவார்த்தைகளிலும் -- பரிகாரம் காணப்பட்டு வந்தது.

தொடர்ந்து தொழிலாளர்கள் வற்புறுத்தி வந்ததன் விளைவாக, போனசு பற்றிய சட்டம் இயற்றுவதற்கு மத்திய அரசு முயற்சிகளை மேற்கொண்டது; அதன்படி, 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25-ந்தேதி, 'போனசு பட்டுவாடாச் சட்டம்' நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

(அ) தனியார் துறையில் -- கூட்டுறவுத் துறையில் -- மற்றும் வியாபாரப் போட்டி உள்ள பொதுத் துறைத் தொழில்களில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவருக்கும் பொருந்துகின்ற வகையில் இந்தப் போனசு சட்டம் நடைமுறைக்குக்கொண்டு வரப்பட்டது; இதில், போனசு உரிமை இல்லாமல் விலக்கப்பட்ட ஊழியர்களுக்குக்கூட, இந்த போனசுப் பலன்கள், 'தொழிலாளர்கள்' என்ற அடிப்படையில் கிடைக்கத்தக்க வகையில் போனசு சட்ட மாறுதல் செய்திட வேண்டுவது அவசியமானதாகும்.

(ஆ) நடைமுறையில் இருந்து வருகின்ற போனசு பட்டுவாடாச் சட்டப்படி, தொழிற்சாலை உற்பத்தி துவங்கியோ -- விற்பனை துவங்கியோ -- ஆறு கணக்கு ஆண்டுகள் ஆன பின்போ அல்லது அதன் இலாப உறுதி நிலை எய்திய பின்னரோ, போனசு சட்டம் பொருந்தும் -- என்கின்ற விதி மாற்றம் செய்யப்பட்டு, தொழிற்சாலை துவங்கி இயங்கத் துவங்குகின்ற அல்லது உற்பத்தியை துவக்குகின்ற ஆண்டு முதலாகவே வேண்டிய வகையில் போனசு சட்டத்தில் மாறுதல் செய்யப்பட வேண்டியது அவசியமாகும்.

(இ) மூலதனத்திற்குரிய வட்டிக்கும் -- ரிசர்வ் நிதி வட்டிக்கும் -- தேய்மான ஒதுக்கீட்டுக்கும் -- செலவினங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற விவரங்களுக்கும் போனசு சட்டத்தில் அமைந்துள்ள விதிகளின் இடையே உள்ள துவாரங்களில், தொழிற்சாலை நிர்வாகத் தரப்பினர் இலகுவாகப் புகுந்து கொள்ளத் தக்க நிலைமை ஏற்பட்டிருக்கிறது; தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்பட்டு -- நிர்வாகத் தரப்பினரால் அளிக்கப்படுகின்ற வரவு–செலவு, இலாப – நட்டக் கணக்குகளை அப்படியே ஏற்றுக்கொள்வதன் காரணமாக எவ்வகையான பெரும் பலனையும் எதிர்பார்க்க இயலவில்லை; மேலும் அந்நிலைமை, பாட்டாளிகளுக்குப் பாதகமாக அமைகிறது; எனவே, வரவு–செலவு, இலாப – நட்டக் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டிருப்பதாலும், அதன் முழுமையான கணக்குகளைத் தொழிலாளர் தரப்புப் பிரதிநிதிகளும் முழுமையாகப் பரிசீலித்துப் பார்க்கும் வாய்ப்பு ஏற்படும் வகையில், 'போனசுச் சட்டத் திருத்தம்' அவசியமானதாகும்.

(ஈ) இயந்திரத் தேய்மானக் கணக்கீட்டுக்கு முறையாக வழி செய்துள்ள போனசு சட்டம், 'மனித இயந்திரம்' தொடர்ந்து ஆண்டாண்டுதோறும் தேய்ந்துபோவதைக் கணக்கிலெடுத்துக் கொண்டு, நியாயமான போனசை எந்த வகையிலும் தொழிலாளர்கள் பெற்றாக வேண்டிய நிலைமை தெளிவுபடுத்தப்பட்டாக வேண்டும்.

(உ) போனசு சட்டத்தின் கணக்கு முறைப்படி, உபரித் தொகை வருவதே அரிது; அவ்விதம் வருகின்ற உபரித் தொகையில் 60 சதவிகிதம் மட்டுமே போனசு என்பதற்குப் பதிலாக உபரித் தொகை முழுவதும் போனசுப் பட்டுவாடாவிற்கு எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

(ஊ) கணக்கின்படி நட்டமே வந்திருந்தாலும், குறைந்தபட்ச போனசுத் தொகை தரவேண்டுமென்று போனசு சட்டம் வழி அமைத்துள்ளது; அது வரவேற்கத்தக்கதுதான்; ஆனாலும், குறைந்தபட்ச போனசாகத் தரப்படுகின்ற தொகையின் அளவு மிக மிகக் குறைந்ததாகும்; தற்போதுள்ள சட்டப்படி, குறைந்தபட்ச போனசு சம்பந்தப்பட்ட ஆண்டில், தொழிலாளர்களின் மொத்த வருமானத்தில் 4 சதவிகிதம் தரப்பட வேண்டும் என்பதாகும்; இந்தக் குறைந்தபட்ச போனசுத் தொகையினை 10 சதவிகிதமாக உயர்த்தப்பட வேண்டுமென்று தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை விரும்பியது; ஆனாலும், 8 1/3 சதவிகிதத் தொகை குறைந்தபட்ச போனசாகத் தரப்பட வேண்டுமென்று கோருகின்ற தனி நபர் மசோதாவினை நாடாளுமன்ற மேலவையின் பரிசீலனைக்கு வரவிருந்த நேரத்தில் அதற்கு நாம் ஆதரவு தெரிவித்துத் தீர்மானம் இயற்றியிருந்தோம்; மேலும், டில்லியில் அண்மையில் நடைபெற்ற இது சம்பந்தமான முத்தரப்பு மாநாட்டின்போது, பெரும்பாலானவர்கள் குறைந்தபட்ச போனசாக 8 1/3 சதவிகிதத் தொகைஅளிக்கப்பட வேண்டும் என்பதற்கு ஆதரவு தெரிவித்துக் கருத்துக்கள் தெரிவித்திருந்தார்கள்.

தொழிலாளர்கள் அரசாம் நமது தமிழக அரசு -- கழக அரசு -- கலைஞர் அரசுச் சார்பில் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள், டில்லியில் குறைந்தபட்ச போனசாக 8 1/3 சதவிகிதம்தரப்படுகின்ற வகையில் சட்டத் திருத்த அவசரம்பற்றி வலியுறுத்திப் பேசியிருக்கிறார்; தமிழக அரசு, 'தொழிலாளர் அரசு' என்பது, இதனால் மேலும் உறுதிப்படுகிறது; இந்த வகையில், கழக அரசுக்கு -- முதல்வர் டாக்டர் கலைஞருக்கு -- அமைச்சர் என். வி. நடராசன் அவர்களுக்குத் தொழிலாளர்கள் சார்பில் -- தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளப்பட பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம்.

இவ்விதம் தரப்படுகின்ற குறைந்தபட்ச போனசுத் தொகையைக் கூட, அடுத்த ஆண்டுக் கணக்கில் தொடர்ந்து நான்கு ஆண்டுகள்வரை எழுதி வைத்துச் சரி செய்து கொள்கின்ற வாய்ப்பினை அளித்திடுவது அவசியமற்றதாகும்.

சுதந்தரமடைந்து இருபத்தைந்து ஆண்டுகள் ஆன பின்னரும் நியாயமான சம்பளத்தை எந்தத் தொழிலில் பணியாற்றுகின்ற ஊழியர்களும் பெற முடியாதிருக்கும் இன்றைய நிலைமையில், குறைந்தபட்ச போனசாக ஒரு மாத மொத்தச் சம்பளத் தொகையை -- அதாவது 8 1/3 சதவிகிதத் தொகையையாவது தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டாக வேண்டும் என்கின்ற சட்டத் திருத்தம் அவசர அவசியமானதாகும்.

மிச்சமிருந்தால் அல்லவா உச்ச வரம்பு இருக்க வேண்டும்? நியாயமான சம்பளமோ, போதிய போனசோ இல்லாத இந்த நிலைமையில், தொழிலாளர் போனசுக்குக்கூட உச்ச வரம்பு விதித்திருப்பது சரியற்றதாகும்.

நடைமுறையில் உள்ள போனசு சட்டப்படி, தொழிலாளர்களின் மொத்தச் சம்பளத்தில் 20 சதவிகிதம் உயர்ந்தபட்ச போனசு என்று வரையறை செய்யப்பட்டிருப்பது நியாயமானதாகாது.

போனசு சம்பந்தப்பட்ட உபரித் தொகை கணக்கீட்டில் அதிபர்கள் தரப்பிற்கே அதிக வாய்ப்புகள் உள்ள நிலைமைகளைக் கடந்தும் -- உயர்ந்தபட்ச 20 சதவிகிதத்தைக் கடந்தும் -- வரவேண்டிய அளவில் அபரிமிதமான இலாபம் இருக்கின்ற தொழிற்சாலைகளில் போனசு அளவிற்கு உயர்ந்தபட்ச எல்லை இருப்பது சரியல்ல; உச்சவரம்பு விதிப்பது முறையற்றதாகும்; எனவே, உயர்ந்தபட்ச 20 சதவிகித உச்சவரம்பு எல்லைப்படுத்தப்பட்டுள்ள விதியினைப் போனசு சட்டத்திலிருந்து நீக்கிவிட வேண்டியது மிக அவசரமானதாகும்.

போனசு சட்டப்படி, தொழிலாளர்களுக்குக் கிடைத்தாக வேண்டிய தொகையை முறையோடு உரிய காலத்தில் தரப்படாத தொழிற்சாலைகள் அதிபர்களிடமிருந்து சம்பந்தப்பட்ட போனசுத் தொகையை தொழில் நீதிமன்ற மூலம் மனுச் செய்து பெற்றுக்கொள்கின்ற வழிவகைகளை எளிமையாக்கிவிட வேண்டும்.

போனசு சட்ட விதிகளுக்கு மேற்பட்ட வகையில் உயர்ந்த விகிதத்தில் போனசு தரப்படுவதை வழக்கமாகவோ அல்லது முந்திய ஆண்டுகள் சிலவற்றில் தரப்பட்டோ இருக்குமானல், அந்த இடங்களில் நிர்வாகத் தரப்பினரும் -- தொழிற் சங்கத்தினரும பேசி முடித்தோ அல்லது பேச்சுவார்த்தையில் முறிவு ஏற்பட்டுவிட்டால் ஏற்கனவே அங்கு நிலவிவருகின்ற வழக்கமான அளவில் போனசு தரப்படுவதற்குரிய நிலைமைக்கு மத்தியஸ்த தீர்வு மூலமோ கூடுதலான தொகையினைத் தொழிலாளர்கள் பெறுவதற்குரிய வாய்ப்பினைத் தடுத்துவிடாத வகையில் போனசு சட்டத் திருத்தம் தெளிவுபட அமைந்தாக வேண்டும்.

மேற்கண்டவைகளெல்லாம் தற்போது நடைமுறையிலிருக்கும் போனசு சட்டத்தில் தேவைப்படுகின்ற அவசியமான திருத்தங்களாகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை தீர்மானிக்கிறது.

தற்போதைக்கு, கீழ்க்காணும் இரண்டு திருத்தங்கள் மிக மிக அவசர அவசியம் வாய்ந்தது என்று தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவையின் மத்திய செயற்குழுக் கூட்டம் தீர்மானித்துள்ளது:—

1. தொழிலாளர்களுக்கும் போனசாகக் குறைந்தபட்சம் அவர்களது மொத்தச் சம்பளத்தில் 4 சதவிகிதம் என்று இருப்பதை 8 1/3 சதவிகிதமாக உயர்த்துவதற்கான வகையிலும், உயர்ந்தபட்சம் 20 சதவிகிதம் என்ற எல்லையை எடுத்துவிட வேண்டும் என்ற வகையிலும் சட்டத் திருத்தம் செய்வதற்கு ஆவன செய்திடுமாறு இந்தச் செயற்குழு மத்திய அரசை கேட்டுக்கொள்கிறது.

2. இந்தக் கோரிக்கைகளுக்காகக் குழுக்கள் போடுவது அல்லது மாநாடுகள் போடுவது என்கின்ற வகையில் காலம் தாழ்த்தாமல், நடப்பு நாடாளுமன்றக் கூட்டத் தொடரிலேயே இந்தச் சட்டத் திருத்தத்திற்கு வழி செய்திட வேண்டுமென்று மத்திய அரசை இந்தச் செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

இந்தியா முழுவதும் உள்ள அனைத்துத்துறைத் தொழிலாளர்களுக்கும் பொருந்துகின்ற வகையில், ஒரு கிராசுடி திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியதற்கான சட்டத்தினைக் கொண்டுவர வேண்டுமென்றும் இந்தக் கூட்டத்தின் போது வலியுறுத்துமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

இந்தத் தீர்மானங்களை தொழிலாளர் சங்கப் பேரவையில் இணைந்துள்ள முன்னேற்றச் சங்கங்களின் சார்பில் 14—11—71-ல் நாளன்று நாடெங்கிலும்--தமிழகம் முழுவதிலும்—கேரள மாநிலம், மைசூர் மாநிலம், புதுவை மாநிலம், அந்தமான்—நிக்கோபார் தீவுகள் முழுவதிலும் 'போனஸ் சட்டத் திருத்தப் போராட்டத்தின் முதல் கட்டமாக ஊர்வலம்—பொதுக்கூட்டங்களில் நிறைவேற்றப்படுத்தி தந்திமூலம் இந்தியத் தலைமையமைச்சருக்கும், மத்திய தொழிலாளர் நல அமைச்சருக்கும், அதன் நகல்களைத் தமிழக முதல்வருக்கும், நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருக்கும் அனுப்புவதற்குரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டுகிறேன்."

மருத்துவமனை சூழ்நிலை கெடுவதைத் தவிர்க்க நடவடிக்கை

பார்வையாளர் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த புதிய திட்டம்

அடுத்த ஆண்டு சனவரித் திங்களில் சென்னை நகரில் நடைபெறும்

செய்தியாளர்களிடம் அமைச்சர் க. அன்பழகன் விளக்கம்

சென்னை, நவ. 12—

"அரசாங்கப் பொது மருத்துவமனைகளில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகளைக் குறித்த நேரத்தில் சென்று பார்க்க இப்போது 2 பேர்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்கப்படுகிறது; ஆனால், இதில் -- 5 பேர்கள் சென்று மருத்துவமனையின் சூழ்நிலையையே கெடுத்து நோயாளிக்கும் தொந்தரவு கொடுக்கிறார்கள்.

"இந்த நிலையைத் தவிர்க்கவும், மருத்துவமனையில் பார்வையாளர்கள் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தவும், 2 பேர்களுக்குமேல் நோயாளியைக் காணவரும் ஒவ்வொரு பார்வையாளரிடமும் பத்துக் காசு வீதம் கட்டணம் வசூலிக்க அரசு முடிவு செய்திருக்கிறது.

"இந்தக் கட்டண வசூலிப்பு முறை அடுத்த ஆண்டு சனவரி முதல் நடைமுறைக்கு வரும்; இப்போதைக்குச் சென்னை நகரில் உள்ள அரசாங்க மருத்துவமனைகளில் மட்டுமே கட்டண வசூலிப்பு முறை நடைமுறைக்கு வரும்"

என்று நல்வாழ்வுத் துறை அமைச்சர் க. அன்பழகன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெள்ளத் தெளிவுற விளக்கிக் கூறினர்.

"மாவட்ட வட்ட மருத்துவமனைகளைப் பொறுத்தவரையில், அங்கெல்லாம் உண்டியல் வைக்கும்படி யோசனை கூறப்பட்டிருக்கிறது; தர்மசிந்தனை உள்ளவர்கள் இதில் காசு போட்டு பொதுக் காரியத்தில் பங்கு கொள்ள வேண்டும்" என்றும் அமைச்சர்கள் அன்பழகன் கேட்டுக்கொண்டார்.

சென்னையில் மருத்துவ ஆராய்ச்சிக் கழகப் பிரிவு துவங்கும்

அமைச்சர் க. அன்பழகன் அவர்கள் மேலும் விளக்கிக் கூறியதாவது:—

"இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த ஒரு பிரிவு சென்னை நகரில் இன்னும் மூன்று வார காலத்திற்குள் அமைக்கப்படும்.

"இத்துடன், மத்திய அரசாங்கத்தின் உதவியுடன் இந்திய மருந்துகள் தர நிர்ணயப் பிரிவு ஒன்றும் சென்னை நகரில் விரைவில் அமைக்கப்படும்.

பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரி

"பாளையங்கோட்டையில் உள்ள இந்திய மருத்துவக் கல்லூரியைத் தொடர்ந்து நடத்தலாம் என்றும், வேறு இடத்திற்கு மாற்றவேண்டாம் என்றும், சென்னை நகரில் மற்றொரு கல்லூரியைத் தொடங்கலாம் என்றும் இந்திய மருத்துவ ஆலோசனைக் கவுன்சில் சிபாரிசு செய்திருக்கிறது; முதலமைச்சர் வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்திலிருந்து திரும்பியதும் இது பற்றி ஒரு முடிவு எடுக்கப்படும்.

சித்த மருத்துவ முறையில் எம். டி. பட்டப் படிப்பு

அடுத்த ஆண்டிலிருந்து பாளையங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரியில் சித்த மருத்துவ முறையில் எம்.டி. பட்டப் படிப்புத் தொடங்கப்படும்.

தமிழ்நாட்டில் ஏற்கெனவே 150 பி. ஐ. எம். பட்டதாரிகள் உள்ளனர்.

காசிப் பல்கலைக் கழகத்திலும், இதர பல்கலைக் கழகங்களிலும் சித்த மருத்துவ முறையிலும் எம். டி. வகுப்புகள் உள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினர்.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிலையம் சென்னையில் அமையும்

சென்னை கீழ்ப்பாக்கம் இராசரத்தினம் தெருவில், மத்திய அரசின் உதவியுடன் இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தை விரைவில் தவக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அத்துடன், இந்திய மருந்துகள் தரக் கட்டுப்பாடு நிலையமும் விரைவில் கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் அமையும்."

பிளேக் நோய் தடுக்கப்பட்டு விட்டது

அமைச்சர் அன்பழகன் மேலும், பிளேக் -- காலரா நோய்கள்பற்றிக் கூறியதாவது:—

"கோவை மாவட்டத்தில் பிளேக் நிலைமை கட்டுக்கடங்கி இருக்கிறது; இதுவரை யாரும் பாதிக்கப்படவில்லை.

எலிகள் செத்து விழுந்ததன்பின் பிளேக் தடுப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டது; செத்த எலிகளைப் பரிசோதனை கோவை -- திருப்பூர் -- உடுமலைப்பேட்டை ஆகிய நகர்களில் மூன்று பரிசோதனை நிலையங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

பிளேக் நோய் தடுப்புக்காக இங்கிலாந்திலிருந்து 15,000 ஊசி மருந்துகள் டில்லி வழியாக இன்று (வியாழக்கிழமை) வருகிறது; அதில், 12,000 தமிழ்நாட்டுக்கும் -- 3,000 கேரளாவுக்கும் அனுப்பப்படும்.

தப்பித்துக்கொள்ள வழி

இப்போதெல்லாம் பிளேக் நோய் தடுப்பு மருந்துகளைவிட, 'டெட்ராசைக்ளின்' போன்ற குணப்படுத்தும் மருந்துகள் வந்துவிட்டதால் பயம் இல்லை.

ஒன்றிரண்டு இடங்களில்தான் எலி செத்து விழுந்ததாகச் சொல்லப்பட்டது; எலி செத்து விழுந்ததும், அதன் உடம்பில் இருக்கும ஈ போன்ற கிருமி சுமார் 3 மீட்டர் தூரம்வரைதான் பறக்கும் சக்தியுள்ளது; அந்த அளவுக்குள் நாம் நெருங்காமல் இருந்தால் தப்பிக்கலாம்.

காலரா நோய் நிலைமை

காலரா நோய் வழக்கமாக அக்டோபர்—நவம்பர் திங்களில் சிறிது வருவது உண்டு; அதைப்போலவே இந்த ஆண்டும் வந்திருக்கிறது; என்றாலும், கட்டுக்கடங்கி இருக்கிறது; மேற்கொண்டு பரவவில்லை."

விமான பயணிகளிடம் ஆயுதம் உள்ளதா?

கண்டுபிடித்து அறிவிக்கும் சாதனம் அறிமுகமாகிறது

இலண்டன், நவ. 14—

கண் இமைக்கும் நேரத்தில் -- மூடிய பெட்டிக்குள் என்ன இருக்கிறது என்பதை, பெட்டியைத் திறக்காமலேயே படம் பிடித்துக் காட்டும் திடீர் எக்ஸ்-ரே சாதனம் ஒன்று பிரிட்டனில் அறிமுகமாகியிருக்கிறது.

ஒரு மேசையின்மேல், பகுதி போல் இருக்கும் கண்ணாடித் தகடு தான் இந்தப் புதிய எக்ஸ்-ரே சாதனம்; இதன் அடியில் எல்லா வித எலக்ட்ரானிக் சாதனங்களும் வைத்திருக்கிறார்கள்; இந்த கண்ணாடிமேல் பெட்டியை வைத்து எடுத்தால் போதும் -- அதனுள் இருப்பவை என்னென்ன என்பதை இந்த நுண்கருவிகள் படம் பிடித்து— அதே விநாடியில் போட்டோ தந்து விடும்.

சாதாரண எக்ஸ்-ரே யூனிட் டைப்போல 'டெவலப்' செய்து தான் படம் தரும் என்ற நிலை இதில் இல்லை; பெட்டியை வைத்து எடுத்த அதே நொடியில் அதன் உட்பகுதியைப் படம் பிடித்தும் போட்டோவையும் தரவல்லது இந்தச் சாதனம்.

விமானப் பயணிகளின் பெட்டிகளில் வெடிகுண்டுகளை அல்லது ஆயுதங்களை எடுத்துச் செல்கிறார்களா என்று கண்காணிக்க -- பெட்டிக்குள் கடத்தல் பொருள்கள் உள்ளனவா என்று பார்க்க உதவும் இந்தச் சாதனம், இதன் வகைகளிலேயே மிக நவீனமானது -- சிக்கனமானது; பெட்டியைத் திறக்காமல் -- உடைமையாளருக்குக் கோபம் ஏற்படுத்தாமல் சோதித்துவிடக்கூடியது.

சென்னை 34 ல் உள்ள இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித் துறை ஆணையாளர் முன்பாக

மனு எண் : 342/1971

நிர்வாக அலுவலர்,
ஸ்ரீ அருணாசலேஸ்வரர் ஆலயம்,
திருவண்ணாமலை,
வடஆற்காடு மாவட்டம் —மனுதாரர்

வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலை வட்டம் திருவண்ணாமலை நகரம் ஸ்ரீ அருணாசலேஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமாக சென்னை-20, அடையாறு பிரிட்ஜ் ரோடு, அருணாசலபுரம் என்று அழைக்கப்படும் ஊரில், சர்வே எண் 41—பிளாட் எண் 10-ல் உள்ள 525¾ சதுர அடி விஸ்தீரணமுள்ள நிலத்தினை, கிரவுண்டு ஒன்றுக்கு 12,500 வீதமும், மேற்படி நிலத்தில் கட்டப்பட்டுள்ள கட்டடத்தின் விலை ரூ. 3,000 எனவும் நிர்ணயம் செய்து, மேற்படி இடத்தில் வசித்து வரும் திருமதி நாகம்மாள் என்பவருக்குத் தனிப்பட்ட முறையில் விற்பனை செய்ய அனுமதி வேண்டி 1959-ம் வருடத்திய இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 34-வது பிரிவின்கீழ் செய்து கொண்ட மனு :—

நோட்டீஸ் மனு எண் 342/71 டி. 1 நாள் 1—11—71

மேற்படி மனு குறித்து சென்னை-34 நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையிலுள்ள தமது அலுவலகத்தில், இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித்துறை ஆணையாளர் அவர்களால் 18—12—1971 அன்று பிற்பகல் 2-மணியளவில் விசாரணை நடத்தப்படும்.

2. மேற்படி மனு குறித்து கருத்துரைகளோ அல்லது மறுப்புரைகளோ எவையேனும் இருப்பின் அவற்றை எழுத்து மூலமாக 13—12—1971 அன்றோ அல்லது அதற்கு முன்போ இந்த அலுவலகத்திற்கு வந்து சேரும்படி அனுப்பி வைக்க வேண்டும்.

3. முறையீடுகள் எவையேனும் இருப்பின் அவற்றினை நேரிலும் விசாரணையின்போது தெரிவித்துக் கொள்ளலாம்.

கோ. நந்தகோபால்
ஆணையாளருக்காக

மதுவிலக்கு ஒத்திவைப்பு மசோதா

ஆளுநர் ஒப்புதல் அளித்தார்

சென்னை, நவ. 12—

தமிழ்நாடு சட்டமன்றத்தின் சென்ற கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு பொது விற்பனை வரி (4-வது திருத்த)ச் சட்டத்துக்கு ஆளுநர் அங்கீகாரம் அளித்துள்ளார்; இந்தச் சட்டம், மது வகைகளுக்கு விற்பனை வரி விதிக்கிறது.

மதுவிலக்கு நடைமுறையை நிறுத்தி வைக்கும் சட்டத்துக்கும் ஆளுநர் அங்கீகாரம் அளித்துள்ளார்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து அந்தமான் பயணம்

சென்னை, நவ. 12—

தமிழகத் தாழ்த்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், 14-11-71 பிற்பகல் 1-50 மணிக்கு விமானம் மூலம் கல்கத்தாவுக்குப் பயணமாகிறார்; பிறகு அங்கிருந்து 15—11—71 மாலை 7-30 மணிக்கு விமானம்மூலம் புறப்பட்டு இரவு 12-55 மணிக்கு அந்தமான் தலைநகரான போர்ட் பிளேயர் போய்ச் சேருவார்.

நவ. 16-முதல் 22-ம் நாள்வரை அந்தமான் -- நிக்கோபர் தீவுகளில் சுற்றுப்பயணம் செய்வார்.

நவ. 23 காலை 7-மணிக்கு போர்ட் பிளேயரிலிருந்து புறப்பட்டு 10-மணிக்கு இரங்கூன் போய்ச் சேருவார்; அங்குள்ள இந்தியத் தூதுவரகத்தில் பர்மா அகதிகள் குறித்து விவாதிப்பார்.

நவ. 24 பிற்பகல் 2-55 மணிக்கு அங்கிருந்து விமானத்தில் புறப்பட்டு மாலை 4-50 மணிக்குக் கல்கத்தா வந்து சேருவார்.

நவ. 25 காலை 10-45 மணிக்குக் கல்கத்தாவிலிருந்து புறப்பட்டு பிற்பகல் 1-05 மணிக்கு சென்னை வந்தடைவார்.

நூல் வெளியீட்டு விழா

வானதி பதிப்பகத்தின் சார்பில் கவிஞர் கண்ணதாசன் நூல் வெளியீட்டு விழா, 13—11—71 காலை 10-30 மணிக்கு சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறும்; திரு. ம. பொ. சிவஞானம் தலைமையில் ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் நூல்களை வெளியிடுவார்; டாக்டர் எஸ். கே. நாயர், டாக்டர் மெ. சுந்தரம், சாண்டில்யன், எஸ். நல்லபெருமாள், அழ. வள்ளியப்பா, ஔவை நடராசன், மற்றும் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

கைதிகளுக்குக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம்

தண்டனையில் சலுகை கிடைக்கும்

அமைச்சர் க. அன்பழகன் அறிவிப்பு

சென்னை, நவ. 12—

"குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஊக்கப்படுத்தும் நோக்கத்தில், சிறைக் கைதிகள் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால், அவர்களுடைய தண்டனைக் காலத்தைக் குறைக்கத் தமிழ்நாடு அமைச்சரவை முடிவு செய்திருக்கிறது.

"அறுவைச் சிகிச்சை செய்து கொள்கின்றவர்கள் பெண்களாக இருந்தால் -- 21 வயதுக்கு மேலும், ஆண்களாக இருந்தால் -- 55 வயதுக்கு கீழும் இருக்கவேண்டும்; மேலும், அவர்களுக்கு 2 குழந்தைகள் இருக்கவேண்டும்.

"இந்தத் திட்டத்தின்படி, 6 திங்களுக்குக் குறைந்த தண்டனை பெற்றவர்களுக்கு 15 நாட்களும், 6 திங்களிலிருந்து ஓராண்டு வரை தண்டனை பெற்றவர்களுக்கு 1 திங்களும், ஓராண்டுமுதல் மூன்றுண்டுவரை தண்டனை பெற்றவர்களுக்கு 3 திங்களும் குறையும்; மூன்றுண்டுமுதல் 10-ஆண்டுவரை தண்டனை பெற்றவர்களுக்கு 6 திங்களும், 10-ஆண்டுக்குமேல் தண்டனை பெற்றவர்களுக்கும் -- ஆயுள் தண்டனை பெற்றவர்களுக்கும் ஓராண்டும் குறையும்; இந்தத் திட்டம் உடனடியாக நடைமுறைக்கு வருகிறது"

என்று நல்வாழ்வுத் துறை அமைச்சர் க. அன்பழகன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; இதன் தொடர்பாகச் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் -- அமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு :—

கேள்வி :— "கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்துகொள்பவர்களுக்குச் சேலை -- வேட்டி பரிசு கொடுப்பதுபோல், சென்னையிலும் கொடுக்கப்படுமா ?

அமைச்சர் :— "ஆங்காங்குள்ள கலெக்டர்கள் இந்தத் திட்டத்தை ஊக்குவிக்கப் பொது மக்களிடம் நன்கொடை வசூலித்து அவ்வாறு செய்கிறார்கள்; ஆகவே, எல்லா இடத்திலும் செய்வது என்பது இயலாது."

கேள்வி :— "பல ஆண்டுகளாக இத்தனைக் கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் செய்திருந்தும், அண்மையில் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்குக்குப் பின்னர், மக்கள் தொகை அதிகரித்த மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறதே ஏன் ?"

அமைச்சர் :— "கருத்தடை அறுவைச் சிகிச்சைத் திட்டம் துவங்கிய முதல் ஆண்டுகளில் அவ்வளவு வெற்றி கிடைக்கவில்லை; ஏனென்றால், எல்லையில் இருந்து இங்கும் அங்கும் போய் வருகிற மக்களின் எண்ணிக்கையாலும் அதிகரித்திருக்கிறது; கடந்த 2-3 ஆண்டுகளாகத்தான் இந்தத் திட்டம் தீவிரப்படுத்தப்படுகிறது; அதிலும் இந்த ஆண்டு மிகவும் தீவிரப்படுத்தப்படுகிறது.

"மாவட்டங்கள் தனித் தனியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன; முதலில் தீவிரப் பிரச்சாரம் செய்யப்படுகிறது; பிறகு அந்த மாவட்டத்தில் பெரும் அளவில் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது; இந்தத் தீவிரத் திட்டப்படி, தஞ்சை மாவட்டத்தில் இரண்டாவது சுற்றில் 4,500 பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

"இந்த ஆண்டில் தமிழ்நாட்டில் 1,20,000 பேருக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யத் திட்டமிட்டிருக்கிறோம்; அந்தத் திட்ட இலக்கை நிச்சயம் நிறைவு செய்யமுடியும் என்று நம்புகிறோம்."

கேள்வி :— "கருத்தடைத் திட்டத்துக்குத் திட்டமிட்டு யாரேனும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்களா ?"

அமைச்சர் :— "அப்படி யாரும் இல்லை; சில இந்துக்கள், 'கடவுள் கொடுத்த செல்வத்தைத் தடுக்கலாமா' என்று கூறிய போதிலும், அதே இந்து மதத்தில் இப்போதுள்ள பல பகுத்தறிவாளர்கள், அறுவைச் சிகிச்சை செய்துகொண்டிருக்கிறார்கள்; அதேபோல், கிறித்துவ மதத்திலும், இஸ்லாம் மதத்திலும் உள்ள பகுத்தறிவாளர்கள் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டிருக்கின்றனர்; நாட்டின் தேவையை உணர்ந்தும் -- பொருளாதார அவசியத்தைக் கருதியும் அவர்கள் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டிருக்கிறார்கள்."

புரசை மகளிர் மன்றம்

புரசை மகளிர் மன்றச் சார்பில், 13—11—71 மாலை 6 30 மணிக்கு முத்தியாலு செட்டி தெரு, 32 எண்ணுள்ள மன்ற அலுவலகத்தில்—டாக்டர் விசாலாட்சி நெடுஞ்செழியன் தலைமையில்—அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள், வெற்றிச்செல்வி அன்பழகன் படத்தைத் திறந்துவைப்பார்; திருமதி அலமேலு அப்பாதுரை, அமுதா ராகவன், மற்றும் பலர் பேசுவர்.

லாண்டரித் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

லாண்டரித் தொழிலாளர் முன்னேற்றச் சங்கக் கூட்டம், 14—11—71 காலை 9-மணிக்கு புதிய சட்டமன்ற உறுப்பினர் விடுதி 219-ம் எண் அறையில் நடைபெறும்; தொடர்புடைய தோழர்கள் கலந்துகொள்ளுமாறு சி. ஆர். கோலப்பா எம்.எல்.சி. கேட்டுக் கொள்கிறார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

14--11--71

குடந்தை

பொதுத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கச் சார்பில் மாலை 6 மணிக்கு சாரங்கபாணிகோயில் சன்னதியில்; தலைவர் : ஆர். சாமிநாதன்; பேசுவோர் : எஸ். மாணிக்கவாசகம், கோ. வெங்கடாசலம், ஆர். சந்திரசேகரன், ஜி. இரங்கராசன், கோ. நடராசன், சீ. பா. இரங்காச்சாரி, அ. கலையரசன், என். மருதமுத்து, சி. எம். கிருஷ்ணமூர்த்தி, ஈ. சௌந்தரராசன் (மாலை 4 மணிக்கு புகைவண்டி நிலையத்திலிருந்து ஊர்வலம் புறப்படும்.)

இராசபாளையம்

திராவிடம் மஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கச் சார்பில் மாலை 6-30 மணிக்கு நகராட்சி முன்புள்ள திடலில்; தலைவர் : ஏ. பி. சுப்பையா; பேசுவோர் : துரைமுருகன் எம். எல்.ஏ., நெல்லை நெடுமாறன், மு. வ. கந்தசாமி எம் சி., எஸ். ஏ. முருகேசன், எம். திருவேங்கடம், மற்றும் பலர்.

புதுக்கோட்டை

பகுத்தறிவாளர் கழகத் துவக்க விழா; காலை 11 மணிக்கு டவுன் ஹாலில்; தலைவர் : ஆர். தருமராசன்; துவக்கி வைப்பவர் : தந்தை பெரியார்; பேசுவோர் : ஏ. தியாகராசன் எம்.எல்.ஏ., ஆர். சண்முகநாதன், டாக்டர் பி. சின்னதுரை, சி. ஆளவந்தார். (மாலை 6 மணிக்கு திலகர் திடலில் பெரியார் அறிவுரையாற்றுவார்.)

உணவு -- வருவாய்த் துறை அமைச்சர்

ப. உ. சண்முகம்

நிகழ்ச்சிகள்

நவ. 13 மாலை 5-மணி: திருவொற்றியூர்—நகராட்சி சலவைத் துறை திறப்பு -- அறிஞர் அண்ணா பூங்கா திறப்பு -- மா. வெ. நாராயணசாமி பூங்கா திறப்பு -- மாண்புமிகு நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் திருவுருவப் படத் திறப்பு.

சென்னை 34 ல் உள்ள இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித் துறை ஆணையாளர் முன்பாக

மனு எண் : 343/1971

நிர்வாக அலுவலர்,
ஸ்ரீ அருணாசலேஸ்வரர் ஆலயம்,
திருவண்ணாமலை,
வட ஆற்காடு மாவட்டம் —மனுதாரர்

வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலை வட்டம் திருவண்ணாமலை கிராமம் ஸ்ரீ அருணாசலேஸ்வரர் கோயில் விஷயமாக :

வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலை வட்டம் திருவண்ணாமலை கிராமம் ஸ்ரீ அருணாசலேஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமாக, சென்னை-20, அடையாறு பிரிட்ஜ் ரோடு (கதவிலக்கம் 64) அருணாசலபுரம் என்று அழைக்கப்படும் உருரில் சர்வே எண் 41--பிளாட் எண் 10-ல் உள்ள 851½ சதுர அடி விஸ்தீரணமுள்ள நிலத்தினை, கிரவுண்டு ஒன்றுக்கு 12,500 வீதமும், மேற்படி நிலத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் கிரயம் ரூ 1,900 வீதமும் மேற்படி இடத்தில் சைக்கிள் கடை வைத்திருக்கும் திரு. சீனுவாசலுநாயுடு என்பவருக்குத் தனிப்பட்ட முறையில் விற்பனை செய்ய அனுமதி வேண்டி 1959-ம் வருடத்திய இந்து சமய அறக் கட்டளைகள் சட்டம் (தமிழ்நாடுசட்டம் 22/1959) 34-வது பிரிவின்கீழ் செய்து கொண்ட மனு :—

நோட்டீஸ் மனு எண் 343/71 டி. 1 நாள் 1—11—71

மேற்படி மனு குறித்து சென்னை-34, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையிலுள்ள தமது அலுவலகத்தில், இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித்துறை ஆணையாளர் அவர்களால் 18—12—1971 அன்று பிற்பகல் 2 மணி அளவில் விசாரணை நடத்தப்படும்.

2. மேற்படி மனு குறித்து கருத்துரைகளோ, மறுப்புரைகளோ எவையேனும் இருப்பின் அவற்றை எழுத்துமூலமாக 13—12—1971 அன்றோ அல்லது அதற்கு முன்போ இந்த அலுவலகத்திற்கு வந்து சேரும்படி அனுப்பிவைக்க வேண்டும்.

3. முறையீடுகள் எவையேனும் இருப்பின் அவற்றை நேரிலும் விசாரணையின்போது தெரிவித்துக் கொள்ளலாம்.

கோ. நந்தகோபால்
ஆணையாளருக்காக

காளை மாட்டுச் சின்னம் சிண்டிகேட்டுக்கு இல்லை

தேர்தல் கமிஷன் தீர்ப்பை தலைமை நீதிமன்றமும் உறுதிபடுத்தியது

புதுடில்லி, நவ. 12—

இரு காளைகள் பூட்டிய நுகத்தடி சின்னத்தை தேர்தல் கமிஷனர் புதிய காங்கிரசுக்கு ஒதுக்கியதை ஆட்சேபித்து பழைய காங்கிரசுத் தலைவர் சதீக் அலி தாக்கல் செய்திருந்த அப்பீலை இந்தியத் தலைமை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இனித் தேர்தல்களில், புதிய காங்கிரசுக்கு இரு காளைகள் பூட்டிய நுகத்தடி சின்னமே ஒதுக்கப்படும் என்பதே தீர்ப்பின் முடிவாகும்.

புதிய காங்கிரசுதான் இந்தியத் தேசியக் காங்கிரசு என்றும், ஆகவே, இந்தச் சின்னத்தை அவர்களுக்குத்தான் ஒதுக்க வேண்டும் என்றும் தேர்தல் கமிஷனர் சென் வர்மா பிறப்பித்திருந்த உத்தரவைத் தலைமை நீதிமன்றம் உறுதி செய்தது.

ஆனால், இந்தத் தீர்ப்பு தேர்தல் சின்னத்திற்கு மட்டுமே பொருந்தும் என்பதையும் நீதிமன்றம் தெளிவாக்கியது; அதாவது, இரு காங்கிரஸ் பிரிவுகளில் எந்தப் பிரிவுக்குக் காளை மாட்டுச் சின்னம் என்பதை மட்டும்தான் தேர்தல் கமிஷன் முடிவு செய்ய முடியும்.

"காங்கிரசு நிறுவனத்தின் சொத்துக்கள் யாருக்குச் சேரவேண்டும் என்ற தகராறு எழுந்தால், அதை, சாதாரண நீதிமன்றங்கள்தான் முடிவு செய்ய வேண்டும்" என்று தலைமை நீதிமன்றத்தின் தீர்ப்பு தெளிவாக்கியிருக்கிறது.

சத்துணவு வழங்கும் திட்டத்தில் தமிழகம்

முன்னணியில் இருப்பதாக மத்திய அமைச்சர் பாராட்டு

கிராமங்களில் விளையாட்டு அரங்கங்கள் அமைப்பதற்கு மானியம்

சென்னை, நவ. 12—

"இருபது இலட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு நாடெங்கும் அளிக்கப்படுகின்றன; ரூ. 10 கோடி செலவாகும் இத்திட்டத்தில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது.

"6 வயது வரையுள்ள குழந்தைகள் – பால் கொடுக்கும் தாய்மார்கள் ஆகியோருக்கு அன்றாடம் காலையில் பால், ரொட்டி வகைகள் தரப்படுகின்றன; இப்பொழுது இத்திட்டம் சேரிகளில் மட்டுமே நடைமுறைப்படுத்தப்படுகிறது"

என்று மத்திய அரசின் சமூக நலத் துணையமைச்சர் கே. எஸ். இராமசாமி அவர்கள் கூறினார்; அவர் மேலும் அறிவித்ததாவது :—

"தமிழ்நாட்டில் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஏற்படும்.

"கிராமங்களில் 2,500 விளையாட்டு அரங்கங்கள் நிறுவப்படும்; அவற்றிற்கு மானியம் முதலில் ரூ 200—பிறகு ஆண்டுதோறும் ரூ. 100 கிடைக்கும்.

"மாநில விளையாட்டுக் கழகங்களின் மூலம் விளையாட்டு வசதிகளுக்கு மானியங்கள் கிடைக்கும்.

"கல்லூரிகளுக்குப் பல்கலைக்கழக மானியக் கமிஷன்களின் மூலம் மானியங்கள் தரப்படுகின்றன.

"பள்ளிகளில் ஹாக்கியின் தரம் உயர்த்தப்பட வேண்டும்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] (24, [illegible] தெரு, சென்னை-1) [illegible]